**Tamil Study Centre, Homebush Inc.**

Postal Address: P O Box 4019, Homebush NSW 2140

www.tsch.org.au info@tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2013

ஆண்டு: 8 திகதி: 15.06.13

நேரம்: 2½ மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி மா. சோமாஸ்கந்தன்

மாணவர் பெயர்:

---

1. **பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.** (15 புள்ளிகள்)

வீரமாமுனிவர் என்பவர் தமிழ்மொழிக்கு அருந்தொண்டு ஆற்றிய ஐரோப்பிய அறிஞர்களுள் ஒருவர். அவர் இத்தாலி நாட்டில் பிறந்தார். அவருடைய இயற்பெயர் கான்ஸ்டன்ஷியுஸ் ஜோசப் பெஸ்கி என்பதாகும். அவர் ஒரு பாதிரியார்.

வீரமாமுனிவர் இளமைக் காலத்திலிருந்தே பல மொழிகளைக் கற்பதில் ஆர்வமுடையவராக இருந்தார். 1710ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு வந்து தமிழ் நாட்டில் சமயத் தொண்டு புரியத் தொடங்கினார். அவர் தஞ்சாவூர், அரியலூர், மதுரை முதலிய ஊர்களில் பணிபுரிந்தார்.

வீரமாமுனிவர் தம் சமயத்தைத் தமிழ் நாட்டில் பரப்ப வேண்டும் என்ற ஆவலில் தமிழ் பயின்றார். ஆதலினால், அவர் தமிழ் இலக்கண இலக்கியங்களை ஆழ்ந்து கற்றுத் தேறினார்; தமிழில் தாமே நூல் எழுதும் ஆற்றலைப் பெற்றார். பல இந்திய மொழிகளைக் கற்றிருந்தாலும் வீரமாமுனிவர் தமிழ்மொழியின் மீது அதிகப் பற்றும் ஆர்வமும் கொண்டிருந்தார்.

வீரமாமுனிவர் மொழிக்கு ஆற்றியுள்ள தொண்டு பாராட்டுக்குரியது. அவர் தமிழில் தேம்பாவணி என்னும் காப்பியத்தைப் பாடினார். அவர் பல இலக்கண இலக்கிய நூல்களோடு "பரமார்த்த குரு" என்ற நகைச்சுவைக் கதை நூலையும் படைத்துள்ளார். முதன் முதலில் தமிழில் அகராதியை உருவாக்கியவர் வீரமாமுனிவரே. திருக்குறளில் அறத்துப்பால், பொருட்பால் இரண்டையும் இலத்தீன் மொழியில் இவர் மொழிபெயர்த்துள்ளார். இந்நூலின் மூலம் ஐரோப்பியர்களும் திருக்குறளின் பெருமையை அறிந்துகொள்ள முடிகிறது.

**(அ) கேள்விகளுக்குப் பதில் எழுதுக:**

1. வீரமாமுனிவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

..............................................................................................................................................
.

2. அவருக்கு எதில் அதிக நாட்டம் ஏற்பட்டது?

..............................................................................................................................................
.

..........................................................................................................................................................

.

3. வீரமாமுனிவர் தமிழில் நூல் இயற்றும் திறனை எவ்வாறு பெற்றார்?

..........................................................................................................................................................

.

..........................................................................................................................................................

.

4. தேம்பாவணி என்பது யாது?

..........................................................................................................................................................

.

..........................................................................................................................................................

.

5. ஐரோப்பியர் திருக்குறளின் சிறப்பை எவ்வாறு தெரிந்துகொள்கின்றனர்?

..........................................................................................................................................................

.

..........................................................................................................................................................

.

**(ஆ) பொருள் எழுதுக** (5 புள்ளிகள்)

1. தொண்டு ...........................................................................

2. பயின்றார் ...........................................................................

3. ஆழ்ந்த ...........................................................................

4. படைத்துள்ளார் ...........................................................................

5. பெருமையை ...........................................................................

**(2) பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி ஐந்து சொற்களுக்கு குறையாமல் வாக்கியங்கள் அமைக்கவும். (20 புள்ளிகள் )**

1. கலைவிழா

.........................................................................................................................................

.........................................................................................................................................

2. நடுவர்கள்

.........................................................................................................................................

.........................................................................................................................................

3. தமிழ் அறிவுப்போட்டி

.........................................................................................................................................

.........................................................................................................................................

4. உழவர்திருநாள்

.........................................................................................................................................

.........................................................................................................................................

5. நுழைவாயில்

.........................................................................................................................................

.........................................................................................................................................

6. வரவேற்றாள்

.........................................................................................................................................

........................................................................................................................................

7. ஓட்டப்பந்தயம்

........................................................................................................................................

........................................................................................................................................

8. காசோலை

........................................................................................................................................

........................................................................................................................................

9. நூல்நிலையம்

........................................................................................................................................

........................................................................................................................................

10. மருத்துவ நிலையம்

........................................................................................................................................

........................................................................................................................................

**(3) பின்வரும் தொடர்வாக்கியங்களைத் தனிவாக்கியங்களாக எழுதுக.** (15 புள்ளிகள்)

1. வணிகன் கன்பராவுக்குச் சென்று பொருட்களைவிற்றுப் பணம் சம்பாதித்தான்.

(i) ..................................................................................................................

(ii) ..................................................................................................................

(iii) ..................................................................................................................

2. அதிபர் வகுப்பறைக்குள் வந்து மாணவர்களை ஒழுங்காக படிக்குமாறு ஆலோசனை கூறிவிட்டு வெளியேறினார்.

(i) ..................................................................................................................

(ii) ..................................................................................................................

(iii) ..................................................................................................................

3. அம்மா கடைக்குச் சென்று காய்கறி வாங்கி வந்து சமைத்து உணவு பரிமாறினாள்.

(i) ..................................................................................................................

(ii) ..................................................................................................................

(iii) ..................................................................................................................

4. கண்ணன் பேசிய பேச்சைக் கேட்டு மாணவர்கள் பெரிதும் இரசித்துக் கரகோசம் செய்தார்கள்.

(i) ..................................................................................................................

(ii) ..................................................................................................................

(iii) ..................................................................................................................

5. போர் வீரர்கள் துப்பாக்கிகளை எடுத்துக்கொண்டு காட்டிற்குச் சென்று பயிற்சியைத் தொடங்கினார்கள்.

(i) ..........................................................................................................

(ii) ..........................................................................................................

(iii) ..........................................................................................................

**(4) தமிழ்க்கலாசார நிகழ்சிகள் சிட்னியில் நடப்பதால் மாணவர்களாகிய நீங்கள் என்ன நன்மைகளை அடைகிறீர்கள் என்பதை 20 சொற்களில் விளக்குக.**

(5 புள்ளிகள்)

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

(5) நீர் அண்மையில் படித்துச் சுவைத்த புத்தகத்தைப்பற்றி உமது நண்பருக்கு 70 சொற்களுக்குக் குறையாமல் கடிதம் ஒன்று எழுதுக. (15 புள்ளிகள்)

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

**(6) பின்வரும் ஏதாவது ஒரு தலைப்பில் 125 சொற்களுக்கு குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக. (25 புள்ளிகள்)**

(i) புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ் ஊடகங்களின் பங்கு

(ii) எமது பாடசாலையில் நடைபெற்ற 2013 ஆம் ஆண்டுக் கலைவிழா

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

**தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்**

**Tamil Study Centre, Homebush Inc.**

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2013

**ஆண்டு: 9** **திகதி: 15.06.13**

**நேரம்: 2½ மணித்தியாலங்கள்**

**ஆசிரியர்: திரு ச. தேவராசா**

**மாணவர் பெயர்:**

**------------------------------------------------------**

1. பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி ஆறு சொற்களுக்குக் குறையாத வாக்கியங்கள் எழுதுக. (15 புள்ளிகள்)

1. அன்பு: ................................................................................................................................................

................................................................................................................................................

2. ஆசை: ................................................................................................................................................

................................................................................................................................................

3. இன்பம்: ................................................................................................................................................

................................................................................................................................................

4. மரங்கள்: ................................................................................................................................................

................................................................................................................................................

5. மிருகங்கள்: ................................................................................................................................................

................................................................................................................................................

6. சிரித்தார்கள்: ................................................................................................................................................

................................................................................................................................................

7. நினைக்கிறேன்: ................................................................................................................................................

................................................................................................................................................

8. ஆடும்: ................................................................................................................................................

................................................................................................................................................

9. நடித்தார்கள்: ................................................................................................................................................

................................................................................................................................................

10. எழுதுகின்றான்: ................................................................................................................................................

................................................................................................................................................

11. சமுத்திரம்: ................................................................................................................................................

................................................................................................................................................

12. விண்வெளி: ................................................................................................................................................

................................................................................................................................................

13. மாணவர்கள்: ................................................................................................................................................

................................................................................................................................................

14. பாடுவாள்: ................................................................................................................................................

................................................................................................................................................

15. .கூவுகின்றது: ................................................................................................................................................

.............................................................................................................................................

2. பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. ( 15 புள்ளிகள் )

உழைத்துக் களைத்த பெரியவர்களுக்கும், படித்துக் களைத்த மாணவர்களுக்கும் ஓய்வு நேரத்தை மகிழ்ச்சியாகக் கழிப்பதற்கு பொழுதுபோக்குச் சாதனங்கள் உதவிசெய்கின்றன. வானொலி, தொலைக்காட்சி, கணினி போன்றவற்றை பொழுது போக்குச் சாதனங்கள் என்று கூறலாம். செய்திகள், பாடல்கள், பட்டிமன்றம், கவியரங்கம், நாடகம் போன்றவற்றைக் கேட்பதற்கு வானொலி உதவுகின்றது. திரைப்படங்கள், நாடகங்கள், நாட்டு நடப்புகள், உலக நடப்புகள் போன்றவற்றைப் பார்ப்பதற்கு தொலைக்காட்சி உதவுகின்றது. இணையத்தளங்களுக்குச் சென்று கல்வி சம்பந்தப்பட்ட விடயங்களை அறிந்து கொள்வதற்கும், திரைப்படங்கள், நாடகங்களைப் பார்ப்பதற்கும், பாடல்களைக் கேட்பதற்கும் கணினி பயன்படுகின்றது. கணினி விளையாட்டுகள் இன்று மாணவர்கள் மத்தியில் பிரபலம் அடைந்துள்ளன. நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக கண்டுபிடிக்கப்பட்ட கையடக்கத் தொலைபேசி, ***ஐபாட்*** (iPad) போன்றனவும் கைகளில் அல்லது பைகளில் எடுத்துச் செல்லக்கூடிய பொழுது போக்குச் சாதனங்களாகிவிட்டன. பொழுதுபோக்குச் சாதனங்களினால் பல்வேறு நன்மைகள் ஏற்படுகின்ற வேளையில் தீமைகளும் ஏற்படுகின்றன.

உடல் ஆரோக்கியமாக இருப்பதற்கும், மனம் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பதற்கும் விளையாட்டுகள் அவசியம். மேலே கூறப்பட்ட பொழுது போக்குச் சாதனங்களினால் மாணவர்கள் கவரப்பட்டதன் காரணமாக பெரும்பாலானோர் விளையாட்டுகளைத் தவிர்த்து வீடுகளிலே தமது ஓய்வு நேரத்தைக் கழிக்கிறார்கள். இதனால் பலர் உடற்பயிற்சி இல்லாமல் தமது வயதுக்கு அதிகமான நிறையை (எடையை) கொண்டவர்களாக இருக்கிறார்கள். இதன் காரணமாக அவர்கள் பல்வேறு நோய்களுக்கு உள்ளாகின்றனர். அவுஸ்திரேலியா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் இது ஒரு பெரிய பிரச்சனையாக உள்ளமையைச் செய்திகள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. அத்துடன் வீடுகளிலும், வாகனங்களிலும் வானொலியை மிகவும் சத்தமாகக் கேட்கின்ற பழக்கம் இளைஞர்களிடையே நிலவுகின்றது. இதனால் நாளடைவில் அவர்களின் கேட்கும் சக்தி படிப்படியாகக் குறைகின்றது. தொலைக்காட்சியையும், கணினியையும் தொடர்ச்சியாக அதிக நேரம் பார்ப்பதனால் கண்பார்வை பாதிக்கப்படுகின்றது. இதனால் பிள்ளைகள் சிறுவயதிலேயே கண்ணாடி அணிய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகின்றனர். கணினி விளையாட்டுகளினால் பிள்ளைகளின் நரம்புகள் பாதிக்கப்படுகின்றன என்று நரம்பியல் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். அண்மைக்கால ஆராய்ச்சியின் படி கணினி விளையாட்டுகளை விளையாடுகின்ற பிள்ளைகளை அந்த விளையாட்டுகள் வன்செயல்கள் செய்யத் தூண்டுவதாக உளவியலாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு பொழுது போக்குச் சாதனங்களினால் நன்மைகள் ஏற்படுகின்ற வேளையில் தீமைகளும் ஏற்படுகின்றன. மாணவர்கள் அவற்றை அளவோடு

பயன்படுத்தி உடற்பயிற்சிக்குரிய விளையாட்டுகளையும் விளையாடினால் நன்மைகளை அதிகமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

1. பொழுது போக்குச் சாதனங்கள் மக்களுக்கு எவ்வாறு உதவுகின்றன? (2 புள்ளிகள்)

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

2. நான்கு பொழுது போக்குச் சாதனங்களை எழுதுக. (2 புள்ளிகள்)

.......................................................................................................................................

3. தொலைக்காட்சி உங்களுக்கு எவ்வாறு பயன்படுகின்றது? (3 புள்ளிகள்)

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

4. பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க. ( 4 புள்ளிகள்)

| | **நன்மைகள்** | **தீமைகள்** |
|---|---|---|
| **வானொலி** | | |
| **தொலைக்காட்சி** | | |
| **கணினி** | | |
| **கணினி விளையாட்டுகள்** | | |

5. மாணவர்கள் பொழுதுபோக்குச் சாதனங்களை அளவோடு பயன்படுத்தி உடற்பயிற்சிக்குரிய விளையாட்டுகளையும் விளையாடினால் அதிகமான நன்மைகளைப் பெறலாம். இக்கூற்று சரியா? பிழையா? காரணம் எழுதுக. (4 புள்ளிகள்)

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

3. பின்வரும் தொடர்வாக்கியத்தை 15 தனி வாக்கியங்களாக மாற்றி எழுதுக. (15 புள்ளிகள்)

எனது பாடசாலை முதலாம் தவணை நிறைவடைந்து எமக்கு இரண்டு வார கால விடுமுறை விடப்பட்டபோது, பிறிஸ்பேனிலிருந்து பெரியப்பா குடும்பத்தினர் எங்கள் வீட்டிற்கு வந்த பின்பு அவர்களை எதாவது அழகான இடத்திற்கு அழைத்துச் செல்வதற்கு அப்பா விரும்ப, நாளைய தினம் ***நீலமலை***க்குச் செல்வதை அனைவரும் ஏற்றுக்கொண்டு மகிழ்ச்சியுடன் தூங்குவதற்கு அறைகளுக்குச் சென்ற எட்டு மணித்தியாலங்களை அடுத்து நீலமலைக்குச் செல்லும் ஆவலினால் எல்லோரும் தூக்கம் நீங்கி எழுந்த பின்பு அப்பாவின் மகிழுந்தில் ஏழுபேரும் நீலமலைக்குப் புறப்பட்டு, முதலில் ***மூன்று சகோதரிகள்*** குன்றுகளைப் பார்த்து மகிழ்ந்து, கம்பி வண்டியில் பயணம் செய்து, மலையிலிருந்து பள்ளத்தாக்கை நோக்கிச் செல்லும் வாகனத்தில் ஏறியதைத் தொடர்ந்து, பற்றைக் காடுகளினூடாக நடந்து திரும்பிய வேளையில் இருள் சூழ்ந்தமையால் வீடு செல்வதற்காக அப்பாவின் வாகனத்தில் ஏறி வருகின்ற வழியில் மக்டொனால்ஷில் இரவு உணவை உண்டு, இரவு பத்து மணிக்கு வீடு வந்து சேர்ந்தோம்.

1.............................................................................................................................................

.............................................................................................................................................

2.............................................................................................................................................

.............................................................................................................................................

3.............................................................................................................................................

.............................................................................................................................................

4.............................................................................................................................................

.............................................................................................................................................

5.............................................................................................................................................

.............................................................................................................................................

6.............................................................................................................................................

.............................................................................................................................................

7.............................................................................................................................................

.............................................................................................................................................

8.......................................................................................................................................................................

.......................................................................................................................................................

9.......................................................................................................................................................................

.......................................................................................................................................................

10....................................................................................................................................................................

.......................................................................................................................................................

11....................................................................................................................................................................

.......................................................................................................................................................

12....................................................................................................................................................................

.......................................................................................................................................................

13....................................................................................................................................................................

.......................................................................................................................................................

14......................................................................................................................................................................

.......................................................................................................................................................

15......................................................................................................................................................................

.......................................................................................................................................................

4. பின்வரும் விடயத்தை தொடர்ந்து 70 சொற்களுக்குக் குறையாமல் எழுதி நிறைவு செய்க. (15 புள்ளிகள்)

அன்று வெள்ளிக்கிழமை வழமை போல ஏழு மணிக்கு நித்திரை நீங்கி எழுந்தேன். குளியலறைக்குச் சென்று பல் துலக்கி, முகம் கழுவிய பின்பு நன்றாகக் குளித்தேன். சுவாமி அறைக்குச் சென்று கண்களை மூடியவாறு இறைவனைத் தியானித்த வண்ணம் நின்றேன். உன்னுடைய பக்தியை மெச்சினேன். உனக்கு வேண்டிய வரங்களைக் கேள், தருகின்றேன் என்று ஒரு குரல் கேட்டது. அப்பாவும், அம்மாவும் வேலைக்குப் போய்விட்டார்கள். நான் மட்டுமே வீட்டில் தனியே இருந்தேன். யாராக இருக்கும்? கண்களைத் திறக்கப் பயமாக இருந்தது. துணிச்சலை வரவழைத்துக் கொண்டு கண்களைத் திறந்தேன். என் கண்களை

என்னாலேயே நம்ப முடியவில்லை. நான் காண்பது கனவா? நனவா? என்று கேட்டு எனது கையை மெதுவாக நுள்ளிப் பார்த்து நனவு தான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டேன். ஏனென்றால் எல்லாம் வல்ல ஆண்டவன் என் முன்னால் நின்று கொண்டு வேண்டிய வரங்களைக் கேள், தருகின்றேன் என்று மீண்டும் கூறினார்.

5. அவுஸ்திரேலியாவிலுள்ள உலக அதிசயங்களைப் பற்றியும் அழகான இடங்களைப் பற்றியும் குறிப்பிட்டு எதிர்வரும் கோடை விடுமுறைக்கு வந்து ஒரு மாதம் உங்களுடன் தங்கி எல்லாவற்றையும் பார்த்துச் செல்லுமாறு ஜேர்மனியிலுள்ள உங்களின் நண்பன் அல்லது தோழிக்கு 80 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கடிதம் எழுதுக. ( 20 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றில் ஒன்றைப் பற்றி 150 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக. (20 புள்ளிகள்)

1) ஒரு சமுதாயமானது குழந்தைகள், சிறுவர்கள், இளைஞர்கள், வயோதிபர்கள் என்ற நான்கு பிரிவினரை உள்ளடக்கியதாக விளங்குகின்றது. வயோதிபர்களுக்கு உரிய மரியாதை கொடுத்து அவர்களைப் பராமரிப்பது முக்கியமான கடமையாகும். அவர்களின் வயது காரணமாக அவர்கள் பல்வேறு பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றார்கள். இவற்றை அடிப்படையாக வைத்து " அவுஸ்திரேலியாவில் தமிழ் முதியவர்கள் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை.

2) கதை, திரைக்கதை, பாடல், இயக்கம், நடிப்பு, நடனம், ஒளிப்பதிவு போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக திரைப்படம் விளங்குகிறது. இந்த விடயங்களை சம்பந்தப்பட்ட கலைஞர்கள் நன்றாகச் செய்கின்ற போது நல்ல படங்கள் உருவாகின்றன. அதேவேளையில் ஒரு படத்திலேயே சில விடயங்கள் நன்றாகச் செய்யப்பட்டும், சில விடயங்கள் நன்றாகச் செய்யப்படாமலும் உள்ளன. இவற்றை அடிப்படையாக வைத்து நீங்கள் அண்மையில் பார்த்த தமிழ்த் திரைப்படம் ஒன்றின் விமர்சனம்.

3) உங்கள் தமிழ்ப் பாடசாலையில் நடைபெறப்போகின்ற வாணி விழாவில் கல்வியா? செல்வமா? வீரமா? சிறந்தது என்ற தலையங்கத்தில் பட்டிமன்றம் நடைபெறவுள்ளது. நீங்கள் கல்வியே சிறந்தது என்று உரையாற்றவுள்ளீர்கள். அதற்காக நீங்கள் தாயரித்த பேச்சு.

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
Tamil Study Centre, Homebush Inc.
Postal Address: P O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2013

ஆண்டு: 10 திகதி: 15.06.13

நேரம்: 2½ மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி பு புருஷோத்தமர்

மாணவர் பெயர்:

-----------------------------------------------------

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

1. **கீழே வரும் உரைப்பகுதியை வாசித்தபின் வினாக்களுக்கு விடை எழுதுக.**
(20 புள்ளிகள்)

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியமாகும். அது மட்டுமன்றி மூவேந்தர், முந்நகரம், முத்தெய்வம், மும்மக்கள், மும்நீதி என்று பல மூன்றுகளைக் கொண்ட சிறப்புக்குரியது. ‘‘நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்’’ என்றார் பாரதியார். ‘‘தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை தேரும் சிலப்பதிகாரம்’’ என்று கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை போற்றுகிறார்.

சிலப்பதிகாரம் ‘‘நாடகக்காப்பியம்’’ எனவும் ‘‘இயல், இசை, நாடகப் பொருள் தொடர் செய்யுள்’’ எனவும் ‘‘உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்’’ எனவும் போற்றப்படுகிறது. தமிழிலே தோன்றிய முதற்காப்பியம் இதுவாகும். சிலப்பதிகாரம் மூவேந்தருக்கும், மூன்று நாட்டினர்க்கும் முத்தமிழுக்கும் பொருந்தும் வகையில் அமைந்ததோடு மூன்று அறநெறிகளை உலகுக்கு உணர்த்துகிறது. ஒன்று அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும். இரண்டு உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர். மூன்று ஊழ்வினை உருத்து வந்தூட்டும் என்பவையே அவை.

சிலப்பதிகாரக் காப்பியத்தின் தலைவி கண்ணகி. அவளைக் கற்பின் செல்வியாகவும் அறிவின் கொழுந்தாகவும் இளங்கோ அடிகள் காட்டுகிறார். கோவலன் பெருஞ்செல்வனாகவும் வணிகனாகவும் விளங்கினான். கலை ஆர்வம் மிக்கோனாக, கலைக்காக எதையும் இழக்கும் பண்புடையோனாகக் காட்டப்படுகிறான். ஆடல் அரசி மாதவியோ ஆடலிலும் பாடலிலும் வல்ல வனிதையாக மட்டுமன்றி கற்பின் செல்வியாகவும் வாழ்ந்தமையைக் காணமுடிகிறது.

சாதாரண குடிமகளான கண்ணகியைத் தெய்வத்தின் நிலைக்கு உயர்த்திக் காட்டுகிறார். மண்ணிலிருந்து தெய்வம் ஒன்று விண்ணகம் சென்றதாக விளம்புவது இளங்கோ அடிகள் செய்த காப்பியப் புரட்சி என்றே கூறலாம்.

1.1 சிலப்பதிகாரத்தில் சொல்லப்பட்ட சிறப்பான மூன்றுகள் எவை? (2 புள்ளிகள்)

………………………………………………………………………………

………………………………………………………………………………

1.2 சிலப்பதிகாரத்தைப் போற்றிப் பாடிய கவிஞர்கள் யார்? (1 புள்ளி)

………………………………………………………………………………

1.3 அவர்கள் (கவிஞர்கள்) கூறிய சிறப்பைத் தருக ( 2 புள்ளிகள் )

………………………………………………………………………………

………………………………………………………………………………

1.4 சிலப்பதிகாரம் எவ்வாறெல்லாம் சிறப்பித்துப் போற்றப்படுகிறது? (2 புள்ளிகள்)

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………………………………………………………………

1.5 சிலப்பதிகாரம் கூறும் மூன்று அறநெறிகள் எவை? ( 3 புள்ளிகள்)

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

1.6 கண்ணகியை இளங்கோ அடிகள் எப்படிக் காட்டுகிறார்? ( 2 புள்ளிகள்)

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

1.7 கோவலனைப் பற்றி பந்தியிலிருந்து என்ன அறிகிறீர்? (2 புள்ளிகள்)

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

1.8 மாதவி எப்படிக் காட்டப்படுகிறாள்? ( 2 புள்ளிகள்)

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

1.9 இளங்கோ அடிகள் செய்த காப்பியப் புரட்சி என்ன? (1 புள்ளி)

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

1.10 ஐம்பெருங்காப்பியங்களில் முதலாவதாக எழுந்த காப்பியம் எது? (1 புள்ளி)

…………………………………………………………………………………

1.11 பின்வருவனவற்றை விளக்குக. (2 புள்ளிகள்)

மூவேந்தர் ……………………………………………………………..

மூன்றுநாடு ……………………………………………………………..

**2. கீழே தரப்பட்டுள்ள சொற்களைப் பயன்படுத்திக் கீறிட்ட இடங்களை நிரப்புக.**
(20 புள்ளிகள்)

வழிகளில், செவிப்புலன், பணியாற்றவேண்டும், தொடர்பு, கட்புல, நாட்டு நடப்புகளையும், பிரபலமான, செவிப்புல, கவிதைகள், அறிவுப்பசிக்குத், இணையம், கட்டுரைகள், விருந்தளிக்கும், பண்பாடு, மேலாக, தகவல்களைப், ஓரேவலைப்பின்னலில், அனைவராலும், நிகழ்ச்சிகளையும், கல்வி வளர்ச்சிக்கு

இன்றைய உலகில் …………………..…….. ………………………….. சாதனங்களில் பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி, தொலைக்காட்சி ……………….…….என்பன பெரிதும் பயன்படுகின்றன. பத்திரிகைகள் நாள்தோறும் ……………………….. உலகச் செய்திகளையும் நமக்குத் தருகின்றன. செய்திகள் மட்டுமன்றி ………..…………….. ……………………. சிறுகதைகள், துணுக்குகள், சித்திரங்கள் முதலியனவும் வெளியாகின்றன. இவை நமது ……………………………………….. தீனியாகின்றன. வானொலி எல்லோராலும் அதாவது எழுதப்படிக்கத் தெரிந்தவர் முதல் எழுதப்படிக்கத் தெரியாதோர் வரை …………………….………..விரும்பப்படும் அறிவுச்சாதனமாகும். மாணவர்களின் ………………………..……… உதவும் வகையில் கல்வி ஒலிபரப்பு …………………….. நடத்துகின்றன. தொலைக்காட்சி ……………………………….. வெகுசனத் தொடர்பு சாதனமாக விளங்குகிறது. இது கட்புலன் ………………………. இரண்டுக்கும் …………………..………….. இவை எல்லாவற்றிற்கும் ……………………. இணையம் உலகம் முழுவதையும் …………….……………… இணைத்து வைத்துள்ளது. இன்று ஒருவரோடொருவர் ………….…………. கொள்ளவும் ………………………….. பரிமாறவும் இணையம் பலவழிகளைக் கையாள்கிறது. கல்வி கலாசாரம் ……………………..…………… ஆகியவற்றைப் பேணத்தக்க …………………..…… வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் ……………………………

3. **ஒரே தொடர்வாக்கியமாகத் தரப்பட்டுள்ளதைப் பிரித்து குறைந்தது பத்துத் தனிவாக்கியங்களாக எழுதுக.** (15 புள்ளிகள்)

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கரம்பொன் கிராமத்தில் 1913 ஆம் ஆண்டு பிறந்த தனிநாயகம் அடிகள், தமிழோடு ஆங்கிலம், இலத்தீன், ஸ்பானிஸ், போர்த்துக்கீசம், பிரெஞ்சு, இத்தாலியம், ஜேர்மன் ஆகிய மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்று, ஈழம் தந்த பேரறிஞர் வரிசையில் சிறப்புப் பெற்று, ஆசிரியராக கல்வித்துறை விரிவுரையாளராக பேராசிரியராக தாய்நாட்டிலும் உலக நாடுகள் பலவற்றிலும் பணியாற்றிப் புகழ் பெற்றதோடு, தமிழ்த் தொண்டாற்றித் தமிழ்த்தூதர் என்று சிறப்புப்பெயர் பெற்று, 1947 இல் தமிழ் இலக்கியக் கழகத்தை உருவாக்கிப் பணிபுரிந்து, 1964 இல் அனைத்துலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தை உருவாக்க முன்னின்று உழைத்ததுடன் 1966 இல் முதலாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டையும் கோலாலம்பூரில் முன்னின்று நடாத்தி, உலகெங்கும் தமிழ் ஒலிக்கத் துடிதுடிப்பும் தொண்டுள்ளமும் கொண்டு பணியாற்றி 1980 ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார்.

3.1 ……………………………………………………………………………

……………………………………………………………………………

3.2 ……………………………………………………………………………

……………………………………………………………………………

3.3 ……………………………………………………………………………

……………………………………………………………………………

3.4 ……………………………………………………………………………

……………………………………………………………………………

3.5 ……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………………………………

3.6 ……………………………………………………………………………

……………………………………………………………………………

3.7 ……………………………………………………………………………

……………………………………………………………………………

3.8 ……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………………………………

3.9 ……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………………………………

3.10 ……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………………………………..

4. கீழே தரப்படும் சொற்களைப் பயன்படுத்தி உமது சொந்தக் கருத்தில் ஒரு பந்தி தயாரித்து எழுதுக. (10 புள்ளிகள்)

தங்கத்தீவுகள், பறவைக் கூட்டம், வெண்மணற்பரப்பில், மாலைப்பொழுது, மக்கள் கூட்டம், கடற்கரை, கடலை கடலை என்று கூவி விற்கும் ஓசை, இருள் கவ்வியது, சிந்தனை ஓட்டம், எழுத்தாளர் விழா, தட்டியெழுப்பினான்.

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

5. கடிதம் எழுதுதல் (15 புள்ளிகள்)

அவுஸ்திரேலியா வரவிருக்கும் உமது பேனா நண்பன் அல்லது நண்பிக்கு அவர் நி.ச.வேல்ஸ் மாநிலத்தில் அல்லது சிட்னியில் பார்த்து மகிழக்கூடிய நான்கு இடங்களை விபரித்து ஒரு கடிதம் எழுதுக. (150 – சொற்கள்)

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

**6. கட்டுரை எழுதுதல் (20 புள்ளிகள்)**

கீழே தரப்பட்ட ஏதாவது **ஒரு** தலைப்பைத் தெரிவு செய்து 200 – 250 சொற்களுக்கு அமைய கட்டுரை எழுதுக.

6.1 HSC "உயர்தரப் பரீட்சைக்குத் தமிழை ஒரு பாடமாக எடுப்பது நன்மை தரும்" என்ற தலைப்பில் 8 – 10 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு நீர் ஆற்ற இருக்கும் பேச்சினை எழுதுக.

6.2 தமிழின் பெருமை பற்றி பத்திரிகையில் பிரசுரிக்க ஒரு கட்டுரை எழுதுக.

6.3 எனது பாடசாலையின் இவ்வருடக் (2013) கலைவிழா

6.4 என்னைக் கவர்ந்த தமிழ் இலக்கியப் புதையல்

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………